# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்

*11, JALAN GEREJA, 43000 KAJANG*
**தொலைபேசி எண்** : *03-8733 1154*
**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*

***Scan for updates***

பங்கு அருள்பணியாளர் : மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
*pereiramargaret01@yahoo.com*

## பங்கின் திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| *30/08/2026* **(ஞாயிறு)** | **காலை 7.00**<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | பொதுக்காலம் 22ஆம் வாரம் ஞாயிறு |
| *31/08/2026* **(திங்கள்)** | காலை 9.00 | சமூகத் திருப்பலி | மலேசிய சுதந்திர தினம் |
| *01/09/2026* **(செவ்வாய்)** | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *02/09/2026* **(புதன்)** | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *03/09/2026* **(வியாழன்)** | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித கிரகோரி<br>திருத்தந்தை,மறைவல்லுநர் |
| *04/09/2026* **(வெள்ளி)** | மாலை 7.30<br>இரவு 8.30 | திருமணி ஆராதனை<br>திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *05/09/2026* **(சனி)** | காலை 7.00<br>மாலை 5.30<br>மாலை 6.00<br>மாலை 6.00 | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் இறைவேண்டல்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி - புனித அந்தோணியார் சிற்றாலயம் செர்டாங். | வார நாட்கள் |
| *06/09/2026* **(ஞாயிறு)** | **காலை 7.00**<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | பொதுக்காலம் 23 ஆம் வாரம் ஞாயிறு |

**HFK FAMILY DAY**

***மலேசிய தினக் குடும்ப ஒன்றுகூடல் – 2026***
தேதி: 16 செப்டம்பர் 2026 – மலேசிய தினம்இடம்: *One Tiger Arena, Kajang* ,திருப்பலி காலை 10.00 மணி
விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு , காலை 11.00 மணி முதல்
நுழைவுக் கட்டணம் – ஒருவருக்கு RM10

RM10 நுழைவுக் கட்டணத்தில் பின்வரும் நிகழ்ச்சிகள் மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றன:
டாட்ஜ்பால் பயிற்சி – தொழில்முறை பயிற்சியாளரால் பயிற்சி மற்றும் நட்பு போட்டி.
முழுமையாக மூடப்பட்ட அரங்கம் – மழை, வெயில் மற்றும் வெப்பத்திலிருந்து பாதுகாப்பான சூழல்.
குடும்பத்தினருக்குப் பாதுகாப்பான இடம் – குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்குப் பாதுகாப்பான உட்புறச் சூழல்.
விளையாட்டுகள் – ஃபுட்சால் மற்றும் ஹேண்ட்பால்; தொழில்முறை நடுவர்களின் மேற்பார்வையில்.
குடும்ப விளையாட்டுப் போட்டிகள் – அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய வேடிக்கையான குழு விளையாட்டுகள். நேரடி மேடை நிகழ்ச்சிகள்.
அதிர்ஷ்டக் குலுக்கல் – முதல் பரிசு RM1,000 பெறுமதியானது!
பவுன்சி கேஸில் – குழந்தைகளுக்கான சிறப்பு பொழுதுபோக்கு.




SJAM நடமாடும் மருத்துவ முகாம் – இலவச உடல்நலப் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை.
வேடிக்கை விளையாட்டுகள் (Funfair Games). இலவச காலை உணவு!
உதவ முன்வாருங்கள்!
கட்டணத்தைச் செலுத்த இயலாத குடும்பங்கள் அல்லது தனிநபர்களுக்கு நுழைவுக் கட்டணத்தை வழங்குவதற்காக நன்கொடைகள் மற்றும் ஆதரவுத் தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.உங்களால் இயன்ற உதவியை வழங்கி, அனைவரும் இந்நிகழ்வில் மகிழ்ச்சியுடன் பங்கேற்க உதவுங்கள்.
பதிவு செய்யும் வழிகள்
கீழே உள்ள இணைப்பின் மூலம் பதிவு செய்யலாம். https://forms.gle/HdsN9cRUYxF47orq6 அல்லது,அனைத்து திருப்பலிகளும் முடிந்த பின்னர் Book Barrow-இல் நேரடியாகப் பதிவு செய்யலாம். தகவல்களுக்கு RAAJ: 012-288 5264 PRISCILLA: 012-603 5264NANCY: 019-336 5638

## அறிவிப்புகள் & பங்கு நிகழ்வுகள்

### பீக்கோட் கூட்டம்

தேதி: *02.09.2026,* புதன்கிழமை
நேரம்: இரவு *8.30* மணி
இடம்: பழைய தேவாலயம் – *R1 & R2*
இந்தக் கூட்டம் தேவாலயத்தில் *(The Salib)* இறைவேண்டலுடன் ஆரம்பமாகும்.எனவே, அனைவரும் குறித்த நேரத்திற்கு தவறாமல் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.*Zone* மற்றும் *BEC* ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் வருகை கட்டாயமாகும்.ஒருங்கிணைப்பாளர் நேரில் கலந்துகொள்ள இயலாத சூழ்நிலையில், தங்களது *Core Team*-இலிருந்து ஒருவரை மாற்று பிரதிநிதியாக *(Substitute)* அனுப்ப வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.அனைவரும் நேரத்திற்கு வருகை தந்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### விவிலிய வகுப்பு

வரும் மாத விவிலிய வகுப்பு *13*ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஃபாதர் ஹெரியொட் அறையில் நடைபெறும். இந்த விவிலிய வகுப்பில் "ரூத்" நூல் பற்றி அறிந்து கொள்ளவிருக்கிறோம். மாலை *4.30* மணிக்கு சிற்றுண்டி, மாலை *5.00* மணிக்கு வகுப்புத் தொடங்கும்.அனைவரும் வருக!

### மலேசிய மேய்ப்புப்பணி பேரவை 2026 , நோன்பு மற்றும் இறைவேண்டல் நாள்

மலேசிய மேய்ப்புப்பணி பேரவை *2026*-க்கான தயாரிப்பின் ஒரு பகுதியாக, பேராயர் ஜூலியன் லியோ அவர்கள் அனைத்து இறைமக்களும் *04* செப்டம்பர் *2026* அன்று நோன்பு மற்றும் இறைவேண்டல் நாளை கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.இந்த முக்கியமான திருஅவை நிகழ்வுக்காக, முழு மறைமாவட்டமும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலை நாடி ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்யும் வகையில், இறைவேண்டல் விழிப்புகள் , புனித நேர ஆராதனை, செபமாலை , கூட்டு இறைவேண்டல் மற்றும் பரிந்துரை இறைவேண்டல்கள் வழிநடத்தப்படவுள்ளன.இந்த நோக்கத்திற்காக, பங்கின் முதல் வெள்ளிக்கிழமை திருமணி ஆராதனையும் திருப்பலியும் அர்ப்பணிக்கப்படுகின்றன.
நிகழ்வு விவரங்கள் "

வெள்ளிக்கிழமை, *04* செப்டம்பர் *2026* , மாலை *7.30* மணி – திருமணி ஆராதனை , இரவு *8.30* மணி – திருப்பலி
மலேசிய திருஅவையின் இந்த முக்கியமான ஆன்மிகப் பயணத்தில், தூய ஆவியாரின் வழிகாட்டுதலையும் ஞானத்தையும் நாடி, நாம் அனைவரும் நோன்புடனும் இறைவேண்டலுடனும் ஒன்றிணைவோம்.
"தூய ஆவியாரே, எங்களை வழிநடத்தும்; எங்கள் திருஅவையை ஒன்றிணைத்து அருளும்."

### புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான உலக தினம் 2026

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான உலக தினம் *2026* முன்னிட்டு, செந்தூல் புனித யோசேப்பு ஆலயமும், புலம்பெயர்ந்தோர் மற்றும் நாடோடிகளுக்கான பணிக்குழுவும் இணைந்து, அனைத்து புலம்பெயர்ந்தோர் சமூகங்களையும் *6*ஆம் *"Migrants and Refugees Got Talent 2026"* நிகழ்வில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றனர்.இந்நிகழ்வின் முக்கிய நோக்கம், இடம்பெயரும் சிறார்களின் மேய்ப்புப்பணி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்துவதாகும்.
கருப்பொருள் : "இச்சிறார்களில் ஒருவராக இருந்தாலும்…"*Even Just One of These Children*
நிகழ்வு விவரங்கள் :
தேதி: *20* செப்டம்பர் *2026,* ஞாயிற்றுக்கிழமை , இடம்: புனித யோசேப்பு ஆலயம், செந்தூல்
பதிவு தகவல்களுக்கு:
migrantsanditinerants@aohd.org
அனைத்து புலம்பெயர்ந்தோர் சமூகங்களும் அன்புடன் பங்கேற்று, ஒற்றுமை, அன்பு மற்றும் சகோதரத்துவத்துடன் இந்நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள்.
"இவர்களில் ஒரே ஒரு சிறாராக இருந்தாலும்…" — அவர்களின் பாதுகாப்பும் நலனும் நமது பொறுப்பு.
*https://forms.gle/rbBaiBQ3152mbdvx9 (for registration)*
*https://forms.gle/aS1NgtDUdHaprT6L9 (for talent show)*

SCAN TO REGISTER
Imbas untuk Daftar
REGISTRATION REQUIRED
Pendaftaran Diperlukan

**உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி**

**வார இறுதி காணிக்கை *22.08/23.08* : RM RM 13,093.00**

### இலையுதிர் திருவிழா 2026

கருப்பொருள்: புனித யூபிலி ஆண்டு – கிறிஸ்துவில் ஒன்றிணைவோம்
தேதி: ஞாயிற்றுக்கிழமை, *27* செப்டம்பர் *2026*
நேரம்: மாலை *6.00* மணி
இடம்: *Holy Family Church Hall, Kajang*
கூட்டுண்ணா இரவு விருந்து *(Potluck Dinner)*
அனைவரும் தங்களால் இயன்ற உணவுப் பதார்த்தம் ஒன்றைத் தயாரித்து கொண்டு வந்து, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அன்புடன் வரவேற்கப்படுகிறீர்கள்.
தயவுசெய்து உங்களுக்குத் தேவையான உணவு உண்ணும் பாத்திரங்கள் மற்றும் கரண்டிகளை கொண்டு வரவும். உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி.
சிறப்பு நிகழ்ச்சிகள்
மேடை நிகழ்ச்சிகள் , வேடிக்கை விளையாட்டுகள் , புகைப்பட அரங்கு *(Photo Booth)* , ஸ்னோ-ஸ்கின் மூன்கேக் தயாரிக்கும் செயற்பாடு
விளக்குக்கூடு தயாரித்தல் , விளக்குக்கூடு ஊர்வலம் , அனைவரும் அன்புடன் வரவேற்கப்படுகிறீர்கள்!
பதிவு செய்ய
https://shorturl.at/lMPjs தகவல்களுக்கு:*Lucie Cheong – 016-697 6384*
கிறிஸ்துவில் ஒன்றிணைந்து, சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு, மத்திய இலையுதிர் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்!"கிறிஸ்துவில் ஒன்றிணைவோம் – அன்பிலும் ஒற்றுமையிலும் மகிழ்வோம்!"